பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 14 | வியாழக்கிழமை | 28.03.2024 | அதிர்வு 240

## முன்னாள் போராளியை 3 நாள் தடுத்துவைத்து விசாரிக்க உத்தரவு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் போராளி செல்வநாயகம் அரவிந்தனை (ஆனந்தவர்மன்) மூன்று நாள்கள் 07▸

# நீரில் மூழ்கி 4 சிறுவர்கள் பரிதாபச் சாவு!



குருநாகல் மாவட்டம், அலவ்வ – வலகும்புர மாஓயாவில் மூழ்கி நான்கு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

14 வயதான நான்கு சிறுவர்களே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளனர்.

நண்பர்கள் ஐவர் மாஓயாவில் நேற்று குளிப்பதற்காகச் சென்றபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

நீரில் மூழ்கிய ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அலவ்வ மற்றும் பொல்கஹவெல பகுதிகளைச் சேர்ந்த நால்வரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

### முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர்

# வைத்தியர் அகிலேந்திரன் கோர விபத்தில் உயிரிழப்பு

### ஓமந்தையில் நேற்று துயரச் சம்பவம்






(கே.வசந்தன், ந.லோகதயாளன்)

வவுனியா - ஓமந்தை, ஏ - 9 வீதியில் நேற்று மாலை இடம் பெற்ற கோர விபத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் உயிரிழந்தார். 07▸

# யாழிலும் கோர விபத்து! விவசாயி ஒருவர் பலி!!





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் – புன்னாலைக்கட்டுவன் சந்தியில் சிறிய ரக உழவு இயந்திரத்தில் தோட்டத்தில் 06▸




தமிழரசுக் கட்சிச் சர்ச்சை குழம்பி, விடயம் நீதிமன்றுக்குப் போகும், போனால் யாருக்கு லாபம் என்பதை முற்கூட்டியே என் பத்தியில் கோடி காட்டி – சுட்டிக்காட்டி – வந்திருக்கிறேன். வாசகர்களுக்கு அது தெரியும்.

ஏற்கனவே ஒரு தேசிய மாநாட்டை மட்டும் நடத்தி விட்டு, வெற்றிகரமாக பத்து ஆண்டுகள் தலைவர் பதவியில் காலத்தை ஓட்டிவிட்டவர் மாவை சேனாதிராஜா. அவருக்கு அப் பதவியை விட்டு விலக சற்றும் விருப்பமில்லை.

நீதிமன்றக் குழப்பம் நீடித்தால் இன்னும் இரண்டு வருடங்கள் தலைவர் பதவியில் தாமே நீடிக்கலாம் என்று 06▸

# தேர்தல்கள் பிற்போடப்படும் என எதிர்க்கட்சிகள் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன

## வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவிப்பு



**“நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டமூலங்களால் எதிர்வரும் தேர்தல்கள் பிற்போடப்படும் என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கின்றது. அரசமைப்பின்படி உரிய நேரத்தில் தேர்தல் நடைபெறும்.”**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஓரிரு சம்பவங்களால் இந்த நாடு வங்குரோத்தாகிவிடவில்லை. இந்த நிலை நீண்ட கால காரணங்களால் உருவாகியது. நாட்டில் நீண்ட காலமாக யுத்தம் இடம்பெற்றது. யுத்தத்திற்குத் தேவையான அனைத்து ஆயுதங்களும் நாட்டின் நிதியில் மூலமே கொள்வனவு செய்யப்பட்டன. அதன்படி முப்பது வருடங்கள் யுத்தம் செய்தோம். முப்பது வருடகால யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்தது. மேலும், 1971 இல், டிரில்லியன் டொலர் பணம் அழிக்கப்பட்டது.

1987 மற்றும் 1988 இல் ஏற்பட்ட பயங்கரமான சூழ்நிலையால் ஏராளமான உயிர்கள் அழிக்கப்பட்டன. மேலும் பொருளாதாரமும் மிகவும் பாதிக்கப்பட்டது. பௌத்த தேரர்கள், பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினர், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டனர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தரவும் கொல்லப்பட்டார். ஏராளமான ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மிகவும் திறமையான தோட்ட முகாமையாளர்களை நாடு இழந்தது.

இந்த நிலையில்தான் நாம் சண்டை பிடித்துக்கொண்டது போதும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து கருத்து வேறுபாடுகளை களைந்து தேசியக் கொள்கைகளுக்காக ஒன்றுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரையொன்றை முன்வைத்தார்.

இப்போதும் அது நாடாளுமன்றத்தில் நடைமுறைப்படுத்தப் படுகிறது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட சட்ட மூலங்களில் தேசிய கொள்கை குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காக ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த நிதிக் கட்டுப்பாட்டு சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளன.

பணப் பயன்பாட்டையும் சட்டக் கட்டமைப்பில் சேர்த்துள்ளோம். எனவே, திருடன், திருடன் என்று யாருக்கும் சொல்ல முடியாது. அனைவருக்கும் சமமான சட்டத்தை அமுல்படுத்துவதே எமது நோக்கம் என்பதைக் கூற வேண்டும். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை கையாள்வது தொடர்பில் மேலும் சில விசேட சட்ட மூலங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இலங்கை வங்குரோத்தானதை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனிப் பணத்தை அச்சிட முடியாது என்று அறிவித்தார். ஆனால் விருப்பமின்றியேனும் நாட்டின் வரி வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எத்தனை சிரமங்கள் இருந்தாலும் மக்களுக்கு நிவாரணம் வழங்க மறக்கவில்லை. அஸ்வெசும பலன்கள் 15000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட்டது. இந்த நாட்டில் இருபது லட்சம் பேருக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் உறுமய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறான பணிகளைச் செய்தார். 6 வருடங்கள் மற்றும் 12 வருடங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதிகளிடம் நாடு ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் அனைவரையும் விட தற்போதைய ஜனாதிபதி இந்த குறுகிய காலத்தில் செயற்பட்ட விதத்தை வேறு எந்த ஜனாதிபதியாலும் ஈடு செய்ய முடியாது. அந்த ஜனாதிபதிகள் வங்குரோத்தான நாட்டில் செயற்படவில்லை. இதன் காரணமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது அனைவரும் அவரைப் பலப்படுத்தி ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும்.

மேலும், எதிர்காலத்தில் அவரை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும். இந்தப் பயணம் மாறினால், மீண்டும் பெற்றோல், காஸ் சிலிண்டர்களுடன் வீதியில் வரிசையில் நிற்கும் யுகம் மீண்டும் உருவாகும். எனவே, மக்கள் கவனமாக செயல்பட வேண்டும்.

நாட்டில் தற்போதைய அரசியல் செயற்பாடுகளை சீர்குலைத்து வெறுப்பு அரசியலில் ஈடுபடும் குழுக்கள் உள்ளன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சகல சக்திகளிலிருந்தும் இலங்கையை விடுவித்து, ஆசியாவின் வளர்ந்த நாடாக உயர்த்த வேண்டுமானால், இந்நாட்டின் பொதுமக்கள் இவ்விடயத்தில் கவனமாகச் செயற்பட வேண்டும்.

அரசமைப்பின்படி ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும், அதன்பின்னர் அரசமைப்பின்படி பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலைஒத்திவைப்பதற்காகதேர்தல்திருத்தங்கள்கொண்டுவரப்படவில்லை. தமக்கு வேறு கோஷங்கள் இல்லாததால்தான் தேர்தலை நடத்துவதில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நாட்டின் வங்குரோத்து நிலை நீக்கப்பட்டு வரும் நிலையில், எதிர்க்கட்சிகளுக்கு இப்போது கோஷங்கள் இல்லாமல் போய்விட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளாக புத்தாண்டை கொண்டாடும் வாய்ப்பு மக்களுக்கு இருக்கவில்லை. ஆனால் இம்முறை புத்தாண்டை கொண்டாடும் சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார். அவர் இந்த நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பியுள்ளார். அவர் அனைத்து மக்களின் நன்றிக்கு தகுதியானவர்.” – என்றார்.

# சுகாதார அணையாடைகளை வாங்க பாடசாலை மாணவிகளுக்கு வவுச்சர்

எதிர்வரும் சித்திரை புத்தாண்டின் பின்னர் பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகளை (sanitary napkins) கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி, பின்தங்கிய பகுதிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளில் உள்ள சுமார் 8 லட்சம் பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக மாணவி ஒருவருக்கு தலா 1,200 ரூபாய் பெறுமதியான வவுச்சர் வழங்கப்படும் எனவும் இந்த திட்டத்துக்காக ஒரு பில்லியன் (நூறு கோடி) ரூபாவை ஒதுக்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# வேதாத்திரிய வேள்வி தினம்!



வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்!

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி ,அவரது வாழ்நாள் முழுவதை யும் சமுதாய நலனுக்காகவும் இந்த கலியுகத்தில், மனிதத்தை உயர்விக்கும் அளப்பரிய சேவையை “மனவளக் கலை “ எனும் யோகப்பயிற்சி மூலமாக சிறப்புற உலகெங்கும் பரவ செய்து வருகின்றார் என்றால் அது மிகையாகாது.

“பாமர மக்களின் தத்துவஞானி” எனப்போற்றப்படும் வேதாத்திரி மகரிஷி அவர்களால் பல ஆராய்ச்சிகளின் பின்னர், 8 வயது முதல் 80 வயதுவரை எல்லோருக்கும் செய்யக் கூடிய எளிய பயிற்சிகளாக இந்த மனவளக்கலைப் பயிற்சிகள் அனைவருக்கும் பொதுவானதாக வடிவமைக் கப்பட்டிருக்கிறது.

இவ்வரிய சாதனையைச் செய்த குரு வேதாத்திரி மகரிஷி யவர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள சென்னைக்கு அருகாமையில் உள்ள “கூடுவாஞ்சேரி “ எனும் சிறிய கிராமத் தில் ஒரு எளிய நெசவாளி குடும்பத்தில் நோன்பு நோற்று , த வமிருந்து, எட்டாவது ஆண் மகனாக பெற்றெடுக்கப்பட்டார்.

1911 ஆம் ஆண்டு ஓகஸ்டு மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். வேதாத்திரி என்ற பெயரையும் பெற்றார். சிறிய வயது முதலே மிகக் கெட்டித்தனமாக வளர்ந்தவரின் மனதில் உயிர் என்றால் என்ன?, கடவுள் என்றால் என்ன?, அவரைப் பார்க்க முடியுமா?, வறுமை ஏன் வருகிறது?, நோய் ஏன் வருகிறது? போன்ற பல கேள்விகளால் எழுந்த தேடல், நிறைவாக உலகுக்கு மனவளக் கலை எனும் எளிய முறை காயகல்பம், எளிய முறை உடற்பயிற்சி

எளியமுறை தியானம், அகத்தாய்வு எனும் தற்சோதனை

**(மனவளக் கலையை எமக்கு வழங்கிய மகான் வேதாத்திரி மகரிஷி 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். இவரது நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**

பயிற்சிகள் மற்றும் பாடசாலைகளின் மூலமாக மாணவர்க ளுக்கு கல்வியாகவும் கிடைக்க வழி சமைத்தது எனலாம்.

வறுமை நிறைந்த வேதாத்திரி மகரிஷி அவர்களின் இளமைக் காலம் அவரின் பல தேடல்களுக்கும் பதிலளித்து அவர் தன்னிலை உணர உதவியாக இருந்தது.

தான் உணர்ந்த அந்த பேரானந்த நிலையை உலக வாழ்வில் சிக்கி உழன்றுக் கொண்டிருக்கும் உலக மக்களுக்கும் கிடைக் கும் வகையில் அனைத்தையும் ஒரு வாழ்க்கைக் கல்வியாக, ஒரு பண்பாட்டுக்கல்வியாக ஒழுங்கமைத்துக் கொடுத்த பெருமை குரு வேதாத்திரி மகரிஷியவர்களைச் சேரும்.

தானுணர்ந்த அனைத்தையும் புத்தகங்களாக வெளியிட்டு வழங்கியதுடன் அதனை எளிய முறை பயிற்சிகளாக அவரே மக்களுக்கு கற்றும் கொடுத்தார் .

1958 ஆம் ஆண்டு “உலக சமுதாய சேவா சங்கம்” என்ற அமைப்பை நிறுவி ஒரு தனிமனிதனாக இக்கல்வியை வழங்கிய பெருமை அவரையே சேரும். அத்துடன் அவர் சளைத்து விடவில்லை!. மேலும் ஒருபடி உயர்ந்து இந்தப் பயிற்சிகளைக் கற்றுத் தேர்ந்தவர்களை ஆசிரியர்களாக உருவாக்கினார்கள்.

இன்று உலகம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான மனவளக் கலை ஆசிரியர்களையும், துணைப் பேராசிரியர்களையும், பேராசிரியர்களையும் உருவாக்கி அதன் மூலம் மனவளக்க லைப் பயிற்சிகள் பயிற்றுவிக்கப் பட்டு வருகின்றன.

இந்தியாவிலே எல்லா பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும், இந்த யோகக்கலை பயிற்றுவிக்கப்பட்டு, பட்டயக் கல்வியாக வழங்கப்படுவதுடன் சென்னை திருவான் மியூரில் ஒரு யோகா கல்லூரியும் செயற்பட்டு வருகிறது.

“உலக சமுதாய சேவா சங்கம்” எனும் அமைப்பு பத்மஸ்ரீ எஸ்.கே.எம். மயிலானந்தம் தலைமையின் கீழ் இன்னும் பல நிர்வாகப் பொறுப்பாளர்களை உள்ளடக்கிய அமைப்பாக மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வெற்றிகரமாக வழிநடத்தப்படுகின்றது.

இதன் செயற்பாடுகளால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்க்கைச் சிக்கல்களை சமாளித்து மன அமைதி பெற்று நோயிலிருந்து விடுதலை பெற்று நிறைவான வாழ்வு வாழ்கிறார் கள்.

இளைஞர்கள் தடுமாற்றமின்றி – தடம் மாற்றமின்றி சிறந்த ஞாபக சக்கியை பெற்று, தற்காலத்திலோ பிற்காலத்திலோ, தனக்கோ பிறருக்கோ, உடலுக்கோ மனதுக்கோ, எண்ணம், சொல், செயலால் துன்பம் தராமல் வாழக் கூடிய ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ்கிறார்கள்.

எத்தகைய செயலுக்கும் ஒரு விளைவு நிச்சயமாக உண்டு என உணர்ந்த விழிப்புநிலையோடு வாழப் பழகுகிறார்கள். இதுவே வாழ்வின் வெற்றியாகும்.

மனவளக்கலை “ளுமுலு லழபய” என இதனை கூறுவர்.

S - simplified
K - kundalini
Y - yoga

எளியமுறை குண்டலினி யோக பயிற்சிகள் என்பதே இதன் பொருளாகும்.

இந்தியாவில் பொள்ளாச்சிக்கு அருகில் ஆழியாறு எனுமிடத் திலே குரு வாழ்ந்த ஆச்சிரமம் அறிவுத்திருக் கோயில் என்ற பெயரில் ஒரு பெரிய கல்வி கலாசாலையாக இயங்கி வருகிறது.

இதுபோன்ற அறிவுத் திருக்கோயில்கள் இந்தியா முழுவதும் அமைக்கப்பட்டு மக்களின் அறிவுப்பசிக்கு உணவளிக்கின்றன.

முதல்முதலாக 2004 ஆம் ஆண்டு இலங்கையில் சு.வசந்தகுமார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மனவளக் கலை பயிற்சிகள் பின்னர் யூ.மதுரைவீரனால் தலைமை ஏற்கப்பட்டு இலங்கையில் பல பகுதிகளிலும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

கொழும்பு வெள்ளவத்தையிலும் யாழ்ப்பாணத்திலும் அறிவுத் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டு அவை மூலமாக வும் மற்றும் தவமையங்கள் மூலமாகவும் எஸ்.கே.வை. பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மதுரைவீரன, முருகானந்தவேல், குழந்தைவேல், செல்வரத் தினம், தேவதாஸ், தங்கராஜா திருமதி.ஸ்டெல்லா, வசந்த குமார் உள்ளிட்ட இன்னும் பல நிர்வாகத் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு மிகச் சிறப்பான முறை யில் இலங்கையில் பல பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.தான், சமுதாயம், இயற்கை என்ற அமைப்பிலே ஒன்றோடொன்று இனிமை காத்து இணக்கமான உறவுடன் வாழ குணநலப்பேறு பெற்று நிறைவில் முழுமைபேறு பெற்று வாழக்கூடிய இக்கலையை எமக்கு வழங்கிய மகான் வேதாத்திரி மகரிஷி 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி (28-03-2006) இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். இவரது சமாதி ஆழியா றிலே அமைந்துள்ளது.

இத்தகைய உன்னத பயிற்சிகளை வழங்கிய குரு வேதாத் திரி மகரிஷியின் நினைவு நாளாகிய இன்று அவரை நினைவு கூர்ந்து எமது வெள்ளவத்தை கொழும்பு அறிவுத்திருக் கோயிலில் மாலை 5 மணி முதல் வேள்வி தின நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.அனைவரும் திரண்டு வந்து சிறப்பித்து அவரது ஆசிகளைப் பெறுவோம்.







# மூடப்பட்டுள்ள தேசிய கலாபவனத்தை திறக்க ஜனாதிபதி ரணில் பணிப்புரை

13 வருடங்களா பூர்த்தி செய்யப்படாமல் உள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கு மற்றும் மூடப்பட்டுள்ள தேசிய கலாபவன வளாகத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, இந்த வருட இறுதிக்குள் தேசிய கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

2011 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கலைக்கூடத்தின் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. தேசிய கலாபவனத்தை புனர்நிர்மாணப் பணியும் முடங்கியுள்ளது.

கலாபவனம் தொடர்பாக கலைஞர்கள் மற்றும் கட்டடக்கலை நிபுணர்கள் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை செவிமடுத்த ஜனாதிபதி, அது தொடர்பில் பொதுவான உடன்பாட்டை எட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சகல தரப்பினருடனும் இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் இந்த வருட இறுதிக்குள் கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார். தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு நகருக்கு இன்று தேவைப்படுவது குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய உயர்தர திரையரங்குகளே எனவும் ஜோன் டி சில்வா திரையரங்கு நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு குறைந்த விலைக்கு திரையரங்குகளை வழங்க முடியுமா என்றும் ஜனாதிபதி வினவியுள்ளார்.

இந்த நிர்மாணம் மற்றும் பராமரிப்பு தொடர்பில் நாடக கலைஞர்களுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதே சிறந்தது எனவும் அவர் வலியுறுத்தினார்.

நாடகத்துறைக்காக லும்பினி அரங்கு மற்றும் புதிய அரங்கு புனரமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு தெரிவித்த ஜனாதிபதி, கொழும்பு சுதர்ஷி வளாகத்தில் நாடக அரங்கொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

தாமரைத்தடாகம், கலாபவனம், ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கு, நூதனசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய வளாகங்களை இணைத்து தேசிய கலாசார வலயமொன்றை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு கலாசார அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.












# இலங்கை அரசு இந்தியாவின் கைப் பொம்மையாகியுள்ளது!

## வசந்த முதலிகே குற்றச்சாட்டு



"அரசாங்கம் இந்தியாவின் கைபொம்மையாகச் செயற்பட்டு வருகின்றது."

– இவ்வாறு மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் வசந்த முதலிகே குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

"நாடு இன்று பாரிய பொருளாதார பின்னடைவில் உள்ளது. அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கான எந்தத் திட்டமும் இல்லை.

வெளிநாடுகளில் கடன்பெற்று அதனூடாகவே நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுள்ளனர்.

இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமையவே அனைத்துத் திட்டங்களும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு ஆதரவான செல்வந்தர்களுக்கு மாத்திரமே சலுகைகளை அரசாங்கம் வழங்குகின்றது.

இவ்வாறான ஒரு நாட்டிலேயே பொருளாதார பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜனாதிபதியும், மத்திய வங்கியின் ஆளுநரும் தெரிவிக்கின்றனர். ஆனால் நாட்டு மக்கள் இன்று வறுமையில் அல்லற்படுகின்றனர்."

– என்றார்.

# செவ்வாய் முதல் பணிப்புறக்கணிப்பு சுகாதாரத் தொழிற்சங்கங்கள் முடிவு



எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி முதல் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனை அறிவித்துள்ளார்.

பொருளாதார நீதியை அடைவதற்கு சுகாதார தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன், நிறைவடைந்துள்ளதால் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தொடர்ச்சியாகப் போராடுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 35,000 ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த காலங்களில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



# சித்திரைப் புத்தாண்டுக்கு முன் சம்பள அதிகரிப்பு வேண்டும்!

## வடிவேல் சுரேஷ் எம்.பி. கோரிக்கை

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சம்பள அதிகரிப்பிற்காக தற்போது முதலாளிமார் சம்மேளனம் முன்வைத்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நப்பாசை போலும். அதனால் இத்தனை பிரச்சினைகளுக்குப் பின்னரும் புதிய குழப்பங்களுக்கு அவர் கால்கோள் போடுகின்றார் என்பது இப்போது வெளியாகும் புதிய தகவலாகும்.

விடயம் முள்ளில் விழுந்த சீலையாகி விட்டது. விவகாரம் நீதிமன்றுக்குப் போய்விட்டது. எப்படியேனும் வழக்கை விரைவாக முடித்து, வழக்குக்கு வெளியே வந்து, கட்சியை முழுமூச்சாக முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதுதான் கட்சியில் எல்லோரினதும் ஒரே விருப்பம்.

வழக்கைத் தொடுத்தவர் வழக்கின் நிவாரணமாக கேட்ட அனைத்தையும் ஏற்றுக் கொள்வதன் மூலமாகவாவது வழக்கை விரைந்து முடித்து, பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத என்ற ஆவலில் தான் முதல் தவணையின் போது வழக்காளியின் நிவாரணக் கோரிக்கை அனைத்துக்கும் இணங்கும் முடிவுக்கு சிறீதரன் எம்.பி. கூட வந்திருந்தார். அவரின் இந்த நிலைப்பாடு வெளிப்படையானது. அதில் சந்தேகம் இல்லை.

அப்படி வழக்காளியின் நிவாரணக் கோரிக்கைகள் அனைத்தையும் சவாலுக்கு உட்படுத்தாமல் ஏற்பதனால் கட்சிக்கு எழக்கூடிய சிக்கல்களை, கடைசியாக நடைபெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் சுமந்திரன் விவரிக்க, சிறீதரன் உட்பட அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டனர் என்று தெரிகிறது. அதன் அடிப்படையில் விடயங்களை புதிய அணுகு முறையில் நகர்த்தி, கட்சியை விரைந்து சிக்கலில் இருந்து விடுவிக்கும் நடவடிக்கையை வழக்கின் அடுத்து வரும் தவணைகளில் சுமந்திரன் செய்து முடிக்க வேண்டும் என்பது அரசியல் குழுக் கூட்டத்தில் பங்கு பற்றிய சிறீதரன் உட்பட அனைவரதும் முடிவாக அமைந்ததை உறுதிப்படுத்த முடிந்தது. அந்தப் பொறுப்பை சுமந்திரன் ஏற்றிருக்கின்றார் என்பதை கூட்டத்தில் பங்குபற்றியோர் மூலம் உறுதிப்படுத்தவும் முடிந்தது.

இதற்கு சுமந்திரன் எந்த வகையான அணுகு முறையை – சட்டவாதத்தை – தயார் பண்ணுகின்றார் என்று தெரியவில்லை. அது பற்றிய கேள்விக்குப் பதில் கூறவும் அவர் மறுக்கின்றார்.

போகின்ற போக்கில், அடுத்த ஓரிரு தவணைகளில் கட்சிக்குச் சார்பாகத் திருகோணமலை வழக்கை திருப்பி நகர்த்துவதற்கு சுமந்திரன் தயாராகின்றார் போல தோன்றுகின்றது. அதற்கு ஆப்படிக்கும் வேலையை ஆரம்பித்திருக்கிறார் மாவையர்.

வழக்கை சுமந்திரன் முடித்து வைக்க இடம் அளித்தால், தன்னுடன் தொங்கிக் கொண்டிருக்கும் கட்சியின் தலைவர் பதவி கையை விட்டுப் போய் விடும் என்று எண்ணியோ என்னவோ வழக்கைக் குழப்பி இழுத்தடிக்கும் புதிய அத்தியாயம் ஒன்றை கனகச்சிதமாக ஆரம்பித்திருக்கின்றார் மாவையர்.

கடந்த இருபது ஆண்டுகளாக கட்சியின் செயலாளராகவும், தலைவராகவும் அவரே இருந்து வந்துள்ளார். கட்சியின் யாப்பு. அதன் திருத்தம் ஆகியவை தொடர்பில் தேர்தல் திணைக்களத்துடன் ஒழுங்கான ஆவணப் பரிமாற்றங்களை அவரின் நிர்வாகம் செய்யவே இல்லை.

யாப்பு திருத்தப்பட்டது, அது இந்தப் பொதுக்குழுவில் அங்கீகரிக்கப்பட்டது, திருத்தத்தின் பின்னரான யாப்பு இது என்ற ஆவணங்கள் எல்லாம் உடனுக்குடன் தேர்தல் ஆணையக் கோவைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். அது கட்டாய நியதி. அது எதையும் ஒழுங்காகச் செய்யும் ஒரு நிர்வாகத்தை வைத்தேயிருக்காத மாவை, இப்போது வழக்கையொட்டி ஒரு புதுச் சிக்கலுக்கு வியூகம் வகுத்திருக்கின்றார்.

கட்சி கடைசியாக கையளித்த ஆவணப்படி கட்சியின் யாப்பு தேர்தல் ஆணையத்திடம் உண்டு. அதைத் தேர்தல் ஆணையம் தனது இணையத்தில் இணைத்து உள்ளது. அந்த யாப்பின் அடிப்படையில் தான் இந்த வழக்கே முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த 2020 செப்டம்பர் 28ஆம் திகதி கட்சியிடம் இருந்து பெற்று, அதனை தனது இணையத்தில் தரவேற்றியிருக்கின்றது தேர்தல் ஆணையம்.

அதற்கிடையில் –

கட்சியின் முடிவை மீறி, தனது ஏவலர் மூலம் தான் வெளியிட்டு வரும் 'புதிய சுதந்திரன்' பத்திரிகையில், 2012 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு யாப்பு மாற்றம் என்ற பெயரில் ஒன்றை இப்போது அவிழ்த்து விட்டிருக்கின்றார் மாவையர்.

2020 செப்டம்பர் திகதியிட்டு தேர்தல் திணைக்களம் தனது இணையத்தில் தரவேற்றி, நான்கு வருடங்களாக உத்தியோகபூர்வ ஆவணமாக – கட்சி யாப்பாக – நடைமுறையிலிருக்கும் ஒன்றுக்கு மாறான பிறிதொன்றை அவர் முன் வைத்திருக்கின்றார்.

அதன்படி, கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை 400க்கும் அதிகம் என்ற வாதத்தையும் அந்தப் பத்திரிகையில் முன் வைத்திருக்கின்றார் அவர்.

அதுதான் சரி என்றால், கடந்த வழக்குத் தவணையின் போது கட்சி யாப்புக்கு அமைவாக பொதுக்குழு கூட்டப்படவில்லை என்று எப்படி மாவை ஏற்றுக் கொண்டு நீதிமன்ற ஆவணத்தில் ஒப்பமிட்டார் என்ற கேள்வி எழுகின்றது.

அது ஒருபுறம் இருக்க, வழக்குச் சம்பந்தப்பட்ட வழக்காளிகள், எதிராளிகள், நீதிமன்றம், தேர்தல் திணைக்களம் ஆகிய தரப்புகள் எல்லாம் கட்சியின் யாப்பு ஆவணமாக கருதும் ஒன்றை விடுத்து, புதிய ஆவணம் ஒன்றை யாப்பாக – புதுக்கதையாக – புகுத்துகின்றார் மாவை.

இனி என்ன? எது கட்சியின் சரியான யாப்பு என்ற சட்டப் பிரச்சனை புதிதாகக் கிளம்பும். அது முடியும் வரை வழக்கு இழுபடும். அதுவரைத் தான்தான் கட்சித் தலைவராகத் தொடரலாம் என்ற நப்பாசை அவருக்கு.

யாப்பாக நடைமுறையில் பேணப்படாத ஓர் ஆவணத்தை யாப்பு என்று கொண்டு வந்து வழக்கை மேலும் குழப்பி இழுத்தடித்தால்தானே, கட்சியின் நிரந்தரத் தலைவராகத் தாம் தொடரலாம் என்ற வேணவாவில்தான் இந்த புதுக்கதையை அவர் அவிழ்த்து விடுகின்றார் என்பது நிச்சயம்.

'புதிய சுதந்திரன்' குறித்து இன்னும் சில விடயங்கள் உண்டு. வரும் நாள்களில் அவற்றைப் பார்க்கலாம்.

## யாழிலும் கோர விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து புற்களை ஏற்றுக்கொண்டிருந்த விவசாயி மீது லொறி மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறி வேகக்கட்டுப்பாட்டை இழந்ததில் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது லொறியில் பயணம் செய்த சாரதி உட்பட மூவர் மது போதையில் இருந்தனர் என்றும், இதனால் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய ரக உழவு இயந்திரத்துடன் நிலைதடுமாறி மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது வீதியில் இருந்த மின்கம்பம், தொலைத்தொடர்பு கம்பம் என்பன முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளது டன்பாரிய மரம் ஒன்றும் முறிந்து விழுந்துள்ளது.

சம்பவத்தில் ஈவினை கிழக்கு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சீனியர் இராஜன் (வயது 65) என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வைத்தியர் அகிலேந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவில் இருந்து கடமை முடிந்து வவுனியா நோக்கிப் பயணித்த பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரின் வாகனம் வவுனியா, ஓமந்தை, கள்ளிக்குளம் சந்தியைக் கடந்து பயணித்தபோது எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது டிப்பர் வாகனத்துக்கு முன்னே அதே திசையில் பயணித்த ஓட்டோவும் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டது.

விபத்தில் வைத்தியர் பயணித்த வாகனம் கடும் சேதமடைந்ததுடன், அதனைச் செலுத்திச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரான வைத்தியர் கு.அகிலேந்திரன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்தார்.

வைத்தியர் கு.அகிலேந்திரன், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பணிப்பாளராகவும் கடமையாற்றிய வராவார்.

இதேவேளை, விபத்துக்குள்ளான டிப்பர் வாகனத்தின் சாரதி ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







## முன்னாள் போராளியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடுத்து வைத்து விசாரிக்கப் பாதுகாப்பு அமைச்சால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு நேற்றுமுன் தினம் வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்த வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசிக்கும் போராளிகள் நலன்புரிச் சங்கத் தலைவர் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவரைப் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் மூன்று நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்கப் பாதுகாப்பு அமைச்சால் நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்யும் வகையில் முகநூலில் அரவிந்தன் பதிவிட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டியே அவரைப் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இந்திய - இலங்கை இணைப்பு

இலங்கைக்கு மிக நெருங்கிய அயல் தேசம் இந்தியாதான். பக்கத்தில் இருப்பதால் புவியியல் ரீதியாக உள்ள நெருக்கத்துக்கும் அப்பால், பல்வேறு விடயங்களிலும் இரு நாடுகளும் அதிகம் நெருங்கி உள்ளன. கலாசாரம், மொழி, மதம், பண்பியல்புகள், வாழ்க்கை முறைமை என்று நெருக்கம் அதிகம் உள்ள துறைகளின் பட்டியல் நீண்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பல மட்டங்களிலும் - பல தளங்களிலும் - இணைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இன்று ஒரு முக்கிய மைல் கல் நிகழ்வு இடம் பெறுகின்றது.

இலங்கையையும் இந்தியாவையும் தரை வழியாக இணைக்கும் பாலம் ஒன்றை அமைப்பது குறித்த பேச்சுகளில் இரண்டு நாடுகளின் உயர் மட்டங்களும் இன்று புதுடில்லியில் ஈடுபடுகின்றன.

இரு நாடுகளையும் பிரிக்கும் பாக்குநீரிணைக்கு ஊடாக நீண்ட பாலம் ஒன்றை அமைப்பதன் மூலம் தரை வழி இணைப்பை ஏற்படுத்துவது குறித்த யோசனை மகாகவி பாரதியாரின் காலத்துக்கு முன்பிருந்தே பேசப்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே, தரைவழிப்பாதை என்ற எண்ணக்கரு புதியதல்ல.

அது, இப்போது இரு நாடுகளின் உயர் மட்டத்தில் ஆராயப்படும் நிலைமைக்கு வந்துள்ளது.

கடந்த வருடம் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த விடயத்துக்கான வாய்ப்புகள், சாத்தியங்கள் குறித்துத் தொடர்ந்து ஆராயவும், திட்டம் பற்றிப் பேசித் தீர்மானிக்கவும் இரு தலைவர்களும் இணங்கி இருந்தனர்.

அதன் பிரகாரம் விடயங்களை கொள்கை ரீதியாக உறுதி செய்யும் நோக்குடன் இலங்கையின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு இப்போது புதுடில்லி சென்றுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் சிரேஷ்ட தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதியின் பணியாள் குழாம் பிரதானியுமான சாகல இரத்தினாயக்கா தலைமையில் இலங்கைக் குழு சென்றுள்ளது. அக்குழுவில் இலங்கையின் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர்கள், ரயில்வேத் திணைக்கள பொதுமுகாமையாளர், சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், தலைமைப் பணியாளர் அலுவலகத்தின் இயக்குநர்கள் போன்றோர் இடம் பெற்றுள்ளனர்.

இன்றும் நாளையும் இந்தியத் தரப்புடன் இந்தத் தரைவழிப் பாதையை அமைப்பதற்கான வாய்ப்புகள், ஏற்பாடுகள் குறித்து இலங்கைக் குழு விரிவாகப் பேச்சு நடத்தும் என்று தெரிகிறது.

ஏற்கனவே இலங்கையையும் இந்தியாவையும் ஆழமற்ற நீர் பகுதி ஊடாக இணைக்கும் விதத்தில் ராமேஸ்வரத்திற்கும் மன்னாருக்கும் இடையில் சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்துக்கு சுண்ணாம்புக்கல் அடித்தளத்தைக் கொண்ட இயற்கை வடிவில் அமைந்த ராமர் பாலப் பாதை உள்ளது.

ஆழம் குறைந்த அந்தப் பாதையை ஒட்டியே தரைவழிப் பாதையை இப்போது அமைக்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகின்றது.

இந்த விடயங்களை ஒட்டிய பூர்வாங்க முடிவுகளை இலங்கையின் உயர் குழு புதுடில்லியில் தங்கியிருக்கும் இரண்டு நாள்களிலும் பேச்சுக்களின் பின்னர் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இந்தத் தரைவழிப் பால இணைப்பு முயற்சியில் கொழும்பு அரசு ஈடுபாடு காட்டினாலும், தென்னிலங்கையில் அரசியல் வட்டாரங்கள் - குறிப்பாக பௌத்த, சிங்கள பெரும் தேசிய வாதத் தரப்புகள் - இதனை இலங்கை மீதான இந்தியாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே நோக்கும் என்பது திண்ணம்.

இலங்கையுடனான தரைவழிப் பாதையை அமைப்பதற்கு பல்லாயிரம் கோடி ரூபாவைத் தாரை வார்க்கப் போகும் இந்தியா, முதலில் மனரீதியாக, உளரீதியாக இலங்கை மக்களுடன் தனது நாட்டை இணைத்துக் கொள்வது குறித்தும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

அதுவும் பக்கத்தில் தமிழ்நாட்டு மக்களுடன் தொப்புள் கொடி உறவாக நிலைத்திருக்கும் வடக்குக் கிழக்குத் தமிழ் தமிழர்களுடன் உளமாற, மனதார இணைப்பை உறுதிப்படுத்த இந்தியா இன்னும் பல காரியங்களை ஆற்ற வேண்டியிருக்கின்றது. அவற்றை மறந்து, புதுடில்லி செயற்பட்டுக் கொண்டிருப்பதுதான் இன்றைய நிலையில் இவ்விடயத்தில் துரதிஷ்டமாகும்.

# காசாவில் உதவிப் பொருள்களைப் பெறமுயன்ற 12 பொதுமக்கள் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்





காசாமீது வான்வெளி ஊடாக வீசப்பட்ட உதவிப்பொருள்கள் கடலில் விழுந்தவேளை அவற்றை எடுக்க முயன்ற 12 பேர் கடலில்மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேலின் ஆறுமாத இராணுவ நடவடிக்கை காரணமாக காசவில் பெரும் பட்டினிநிலை உருவாகியுள்ள நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடகாசாவில் உள்ள பென்லகியா கடற்கரையோரத்தை நோக்கி பொதுமக்கள் ஒடுவதையும் அதன் பின்னர் ஆழமான நீரில் பொதுமக்கள் காணப்படுவதையும் பின்னர் அவர்களின் உடல்கள் மீட்கப்படுவதையும் காண்பிக்கும் காணொலிகள் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

தனது பிள்ளைகளிற்கு உணவை பெற்றுக்கொள்வதற்காக கடலுக்குள் நீந்தி சென்ற நிலையில் ஒரு தந்தை தியாகியாக மாறிவிட்டார் என கடற்கரையில் நிற்கும் ஒருவர் காணொலியில் பதிவிட்டுள்ளார்.

மேலும், அந்த நபர் அவர்கள் தரைவழி ஊடாக மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும், ஏன் இப்படி செய்கின்றார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு 18 பொதிகளில் மனிதாபிமான உதவிகளை பரசூட் மூலம் வீசிய நிலையில் பென்டகன் பரசூட் இயங்காததால் அவை கடலிற்குள் விழுந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய்லாந்தில் தன்பாலின திருமணத்தை அங்கீகரிக்கும் சட்டமூலம் நிறைவேற்றம்




தன்பாலின திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்கும் சட்டமூலம் தாய்லாந்து நாடாளுமன்றத்தின் கீழ் அவையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு 400 பேர் ஆதரவாகவும், 10 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

எனினும், இதனை சட்டமாக மாற்றுவதற்கு செனட் சபையின் அங்கீகாரம் அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அங்கீகாரம் இந்த ஆண்டின் இறுதிக்குள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி தன்பாலின திருமணங்களை அங்கீகரிக்கும் முதல் தென்கிழக்காசிய நாடாக தாய்லாந்து மாறவுள்ளது. இந்த சட்டத்தின்படி, திருமணமான ஒரே பாலினத்தவர்களும் குழந்தைகளைத் தத்தெடுக்க முடியும்.

எவ்வாறாயினும், தந்தை மற்றும் தாய் ஆகியோருக்கு பதிலாக பெற்றோர் என்ற வார்த்தையை பயன்படுத்துவதற்கான பரிந்துரையை கீழ் சபை நிராகரித்துள்ளது.

தாய்லாந்தில் ஏற்கனவே பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலை மீதான பாகுபாட்டைத் தடைசெய்யும் சட்டங்கள் உள்ளன.

இந்த நிலையில், தன்பாலின திருமணத்தை சட்டப்பூர்வமாக்குவதற்காக கடந்த காலங்களில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதன்படி, இதற்கான சட்டமூலத்தை கொண்டுவருவது தொடர்பில் தாய்லாந்து அரசாங்கம் கடந்த வருடம் நடத்திய கணக்கெடுப்பில், 96.6 சதவீதமானோர் ஆதரவாக கருத்து வெளியிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், தாய்லாந்தின் மாற்று பாலினத்தவர்கள் அதிகம் இருந்தாலும், அவர்கள் தன்பாலின அடையாளத்தை மாற்ற அனுமதிக்கும் முன்மொழிவுகளை தாய்லாந்து நாடாளுமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த நிலையில், தன்பாலின திருமணம் தொடர்பான சட்டத்தை நிறைவேற்றிய முதல் ஆசிய நாடாக தாய்வான் 2019 ஆம் ஆண்டு இடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் மக்களவைத் தேர்தல்:

# 1,400 இற்கும் மேற்பட்டோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள 39 மக்களவை தொகுதிகளுக்கு போட்டியிடும் நோக்கில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் தனித்து போட்டியிடும் சுயேச்சைகள் என சுமார் 1,400 இற்கும் மேற்பட்டோர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இது குறித்த தகவல் தேர்தல் ஆணையத்தின் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் ஏப்ரல் 19 ஆம் திகதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. வேட்புமனு தாக்கல் கடந்த 20 ஆம் திகதி தொடங்கியது. ஆரம்ப நாள்களில் மனு தாக்கல் மந்தமாக இருந்தது. சில சுயேச்சை வேட்பாளர்கள் மட்டும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். இதில் வேட்பாளர்கள் சிலர் தங்களது தனித்துவ செயலால் கவனம் ஈர்த்தனர்.

இந்த நிலையில், கடந்த திங்கள்கிழமை பங்குனி உத்திரம் நல்ல நாள் என்பதால் தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க, தே.மு.தி.க உள்ளிட்ட அரசியல் கட்சி வேட்பாளர்கள் ஏராளமானோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதனால், வேட்பாளர்கள், கட்சியினர் வருகையால் தேர்தல் அலுவலகங்கள் களைகட்டின. 39 தொகுதிகளிலும் மனுதாக்கல் விறுவிறுப்பாக நடந்தது.

தேர்தல் ஆணையம் ஏற்கெனவே அறிவித்தபடி, வேட்புமனு தாக்கல் செய்ய நேற்று கடைசி நாள் என்பதால் அதிக அளவில் வேட்புமனு தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த சூழலில், தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் 1,400 இற்கும் மேற்பட்டோர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் உள்ள புதுச்சேரி தொகுதியில் சுமார் 45 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை செய்யும் பணி இன்று நடைபெறுகிறது.

# நான் உங்கள் சித்தி வந்திருக்கிறேன் மதுரையில் நடிகை ராதிகா பிரச்சாரம்



“நான் உங்கள் சித்தி வந்திருக்கிறேன்” என்று கூறி மதுரையில் நடிகை ராதிகா பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்துள்ளார்.

விருதுநகர் மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் நடிகை ராதிகா, விருதுநகர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட மதுரை மாவட்டம் சிலைமான் பகுதியில் கணவர் நடிகர் சரத்குமாருடன் பிரச்சாரம் செய்தார்.


இதன்போது ராதிகா மேலும் உரையாற்றுகையில்,

“பா.ஜ.க. வேட்பாளராக போட்டியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். டில்லியில் இருப்பவர்களுக்கு ஏன் வாக்குப் போட வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். நீங்கள் வாக்குப் போட்டால் தான் டில்லியில் நல்ல ஆட்சி அமையும். இந்தியாவில் 10 ஆண்டுகளாக நல்லாட்சி நடைபெற்று வருகிறது. பிரதமர் மோடி 3 ஆவது முறையாகவும் பிரதமராக வர வேண்டும்.

பிரதமர் மோடி பத்தாண்டு கால ஆட்சியில் இந்தியாவை பாதுகாப்பாக வைத்துள்ளார். இந்தியா வளர்ச்சி அடைந்த பெரிய நாடாக உள்ளது. வெளிநாடுகள் சென்றால் இந்தியர்களை பெருமையாக பார்க்கின்றனர். ஒவ்வொருக்கும் அந்த பெருமையை மோடி தந்துள்ளார்.

மத்திய அரசின் நலத்திட்டங்கள் உங்களை சென்றடைய வேண்டும். விருதுநகர் தொகுதியில் மாணிக்கம் தாகூர் 2 முறை எம்.பியாக இருந்துள்ளார். அவர் எதையும் செய்யவில்லை. இரண்டு முறை வாய்ப்பு கொடுத்தும் எதையும் செய்யாத மாணிக்கம் தாகூரை ஒதுங்க சொல்லுங்கள்.

விருதுநகருக்கு நான் வந்துள்ளேன். உங்கள் சித்தி வந்துள்ளேன். அக்கா வந்திருக்கிறேன். சகோதரி வந்திருக்கிறேன். உங்களுக்கு நல்ல பிரதிநிதியாக இருந்து, உங்களுக்கு வேண்டியதை டில்லியில் வாதாடி வாங்கித்தருவேன். விருதுநகரில் சுகாதாரம் இல்லை, நல்ல மருத்துவமனை இல்லை. பேருந்து வசதியில்லை. நான் எம்பியானால் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் வந்து சேரும்.” – என்றார்.




# தெற்காசியாவிலேயே மிகப் பெரிதான மகப்பேற்று வைத்தியசாலை காலியில்

## ஜனாதிபதி ரணில் திறந்து வைத்தார்





கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் நவீனமயப்படுத்தாமல் நாட்டின் எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்க முடியாது. மூன்றரை தசாப்தங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக போதிய மூலதனச் செலவுகள் வழங்கப்படவில்லை.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தெற்காசிய வலயத்தின் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலையாகக் கருதப்படும் காலி கராபிட்டியவில் நிர்மாணிக்கப்பட்ட ஜேர்மன் – இலங்கை நட்புறவு புதிய பெண்கள் வைத்தியசாலையை மக்களின் பாவனைக்காக நேற்று திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆறு மாடிகளைக் கொண்ட இந்த வைத்தியசாலை 640 படுக்கைகள், 6 அறுவை சிகிச்சை நிலையங்கள், அவசர சிகிச்சை பிரிவுகள், தீவிர சிகிச்சை பிரிவுகள், ஆய்வகங்கள், சிசு தீவிர சிகிச்சை பிரிவுகள், விசேட குழந்தை பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து நவீன மருத்துவ வசதிகளையும் கொண்டுள்ளது. கழிவுநீரைச் சுத்திகரித்து வெளியேற்றும் பிரிவும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக ஜெர்மன் அரசாங்கம் 25 மில்லியன் யூரோக்களை (சுமார் 357 கோடி ரூபாய்) வழங்கியிருந்தது. வைத்தியசாலைக்கான செலவுகளில் ஒரு பகுதி நன்கொடையாகவும், மற்றைய பகுதி இலகுக் கடனாகவும் கிடைத்துள்ளது.

வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக ஆரம்பத்தில் 800 பேர்ச்சஸ் காணி ஒதுக்கப்பட்டது. பின்னர் மேலும் இரண்டு காணிகள் கையகப்படுத்தப்பட்டு தற்போது வைத்தியசாலையின் மொத்த பரப்பளவு சுமார் ஆயிரம் பேர்சஸ்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

புதிய மகப்பேறு வைத்தியசாலையை திறந்து வைத்ததன் பின்னர், நவீன சத்திர சிகிச்சை நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

“முன்னர், நமது மருத்துவர்களுக்கு மலேரியாவுக்கு எதிராக போராட வேண்டியிருந்தது. ஆனால் தற்போது முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், பல்வேறு நோய்கள் ஏற்படுவதாலும் சுகாதாரத் துறையின் சவால்கள் அதிகரித்துள்ளன. எனவே, சுகாதார சேவை அதற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.

மேலும், இந்த நாட்டில் கல்வி முறையும் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும். இதுவரை, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான மூலதனச் செலவு குறைவாகவே ஒதுக்கப்பட்டது. முன்னர் சுகாதாரம் மற்றும் கல்விக்கு போதுமான பணம் செலவிடப்படவில்லை. யுத்தத்திற்கு பெருமளவு பணம் ஒதுக்க வேண்டியேற்பட்டதே அதற்குக் காரணம்.

இரண்டாவதாக, அதிக அளவு கடன் வாங்கியிருப்பதால், அதிக பணத்தை வட்டியாகச் செலுத்த நேரிட்டுள்ளது. 1980 – 1989 களில் நான் கல்வி அமைச்சராக

12 ▶









# தெற்காசியாவிலேயே மிகப் பெரிதான மகப்பேற்று வைத்தியசாலை காலியில்

## ஜனாதிபதி ரணில் திறந்து வைத்தார்





(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்த காலத்தில் கல்விக்காக அதிக நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேன். ஆனால் பின்னர் பல்வேறு காரணங்களால் கல்விக்காக அதிக பணம் செலவிட வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் நாம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் அதிக அளவில் கடன் வாங்க நேரிட்டதால், எங்கள் வருமானத்தில் 50 வீத கடன் மற்றும் வட்டிக்காகச் செலவிடப்படுகிறது. இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 07 டிரில்லியனுக்கும் மேல் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 3.9 டிரில்லியன் கடனை திருப்பிச் செலுத்த ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மூன்றில் ஒரு பங்கு கடனைத் திருப்பி செலுத்தவும், மூன்றில் இரண்டு பங்கு வட்டியைச் செலுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 1.2 டிரில்லியன் சம்பளத்திற்காக செலவிடப்படுகிறது. மூலதனச் செலவுகளை ஒதுக்கிய பின்னர், மிகக் குறைவான தொகையே எஞ்சுகிறது. நீர்ப்பாசனம் உள்ளிட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு நாம் தொடர்ந்து பயணிக்க முடியாது. அதனால் தான் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை உடனடியாக மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறு எங்களுக்குத் தெரிவித்தன. இந்த ஆண்டுக்கான செலவினங்களுக்குத் தேவையான பணத்தை நாட்டிற்குள் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தான் முதல் முடிவாகும். நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் இது முக்கியமான முடிவாகும். எக்காரணத்திற்காகவும் இனி பணம் அச்சிட முடியாது. மேலும், அரசு வங்கிகளில் பணம் பெற முடியாது. நாட்டிற்குள் இருந்து தேவையான வருமானத்தை ஈட்டிக் கொண்டு, முன்னேற வேண்டும்.

இதில் எமக்கிருந்த ஒரே வழி வரியை உயர்த்துவதுதான். இதற்காக அனைவரும் எங்களைக் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இந்த நடவடிக்கையால், முதல் முறையாக வரவு – செலவுத்திட்டத்திற்காக பணத்தை அச்சிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. அனைவரும் எதிர்கொள்ளும் சிரமங்களை நாம் அறிவோம். ஆனால் வரி அதிகரிப்பால் இன்று வரவு – செலவுத் திட்டத்திற்காக கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. அதன் பெறுபேறுகளை இன்று நாட்டில் காணமுடிகிறது. டொலருக்கு நிகராக 370 ரூபாவாக இருந்த ரூபாயின் பெறுமதி, தற்போது 300இற்கும் குறைவாக சரிந்து, ரூபா வலுப்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் மேலும் ரூபா வலுவடையும்.

மேலும் பணவீக்கம் குறைவதால் வட்டி வீதத்தைக் குறைக்க முடியும். அப்போது தொழிற்துறைகள் முன்னேற்றமடையும். தொழிற்துறை வளர்ச்சியால் நாடு முன்னேற்றமடையும். கஷ்டமாக இருந்தாலும், எடுத்த தீர்மானங்களினால் நாடு இன்று பலனடைந்துள்ளது. மேலும், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்துள்ளோம். குறைந்த வருமானம் பெறும் அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக உயர்த்தியுள்ளோம். இதனுடன் தனியார் துறையிலும் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுத்தால், அடுத்த 02 வருடங்களில் நாம் செலுத்த வேண்டிய கடன் தொகை படிப்படியாக குறையும். அந்த பணத்தை நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தலாம்.” – என்றார்.





# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரானார் நாமல்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மொட்டுக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், பஸில் ராஜபக்ஷவின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது.

இதன்போதே தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாமல் ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சர்வதேச நாடக தினத்தை ஒட்டி யாழ். பல்கலையில் நாடகங்கள்

**(பிரபாகரன் டிலக்சன்)**

அனைத்துலக நாடக தினமான நேற்று மார்ச் 27 திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா, பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரையில் இரு அமர்வுகளாக நடைபெற்றது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் த.துலக்ஷன் தலைமையில் நடைபெற்ற நாடக தின விழாவில் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார். பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களின் நாடகங்களுடன், சமூகத்தில் நாடகக் கலையை முன்னெடுத்து வரும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் அனைத்துலக நாடக தின விழாவில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# சுவாமி விபுலானந்தரின் ஜனன தினம் நேற்று திருகோணமலையில் நிகழ்வு

(ஏ.எச்.ஹஸ்பர்)

சுவாமி விபுலானந்தரின் 132 ஆவது ஜனன தின நிகழ்வு திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுச் சபை ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு அதன் தலைவர் கோ.செல்வநாயகம் தலைமையில் இடம் பெற்றது.

இதில் சமூக, கல்விச் சேவையாளர்களைப் பாராட்டி கௌரவிப்புக்களும் இடம் பெற்றன. பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்த மாணவன் ஹ.தன்வந்தும் கௌரவிக்கப்பட்டார்.

இதில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இமானுவேல், பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குரு சோ.இரவிச்சந்திர குருக்கள், தவத்திரு அடிகளார் தென்கயிலை ஆதீனம், திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி, திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தின் தலைவர் ச.குகதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# சர்வதேசப் போதைப்பொருள் கடத்தல்காரர் நுவரெலியாவில் ஒளித்திருந்தபோது கைது

நுவரெலியாவில் பதுங்கியிருந்த சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படை கைது செய்துள்ளது.

நுவரெலியாவில் சர்வதேச போதைப் பொருள் கடத்தல்காரர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இவர் டொன் நந்தசேன என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் தனது மனைவியுடன் நுவரெலியாவில் தலைமறைவாக இருந்த போதே கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர் இலங்கைக்குத் திரும்புவதற்கு முன்னர், சிறிது காலம் இந்தியாவில் தலைமறைவாக இருந்துள்ளார்.

அண்மையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்ட 09 கிலோ கிராம் எடையுள்ள 'ஐஸ்' போதைப்பொருள் இவர் மூலமே இலங்கைக்குள் கடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# தந்தை செல்வா ஜெயந்தி தின நிகழ்வு; நேற்று யாழ் ஊடக சந்திப்பில் விளக்கம்

தற்போது தமிழ் மக்களுக்கு தந்தை செல்வாவின் ஒருமித்த நிலைப்பாடு மிகவும் முக்கியமான ஒன்று என யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 126 ஆவது ஜெயந்தி தினம் வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றது. இது தொடர்பாக இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தந்தை செல்வா அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து, தமிழ் மக்களை ஒரு சரியான பாதையில் வழிநடத்திச் சென்றார். அவரது வழிகாட்டல் தற்போதும் தமிழ் மக்களுக்கு தேவைப்படுவதாகவும் முன்னாள் அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டினார்.




தந்தை செல்வாவின் ஜெயந்தி தினம் தொடர்பாக அறங்காவலர் சபையின் தலைவர் பேரின்பநாயகம் அவர்களும் கருத்து வெளியிட்டார்.

# ஆஸி தூதுவருடன் ஆளுநர் சந்திப்பு

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பவுல் ஸ்டீபன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார். ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

ஆஸ்திரேலியத் தூதரகம் ஊடாக வடக்கில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், ஆளுநருக்கு தெளிவுபடுத்தினார். அத்துடன் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் வளங்களை அடையாளப்படுத்தி, புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் ஆஸ்திரேலிய வாழ் இலங்கை புலம்பெயர் உறவுகளுக்கு தெளிவுபடுத்துமாறும் உயர்ஸ்தானிகரிடம் ஆளுநர் கேட்டுக் கொண்டார். வடக்கு மாகாணத்தில் தொழிற்துறையை மேம்படுத்துவதனூடாக வேலையின்மைப் பிரச்சினை தீர்க்கப்படுவதுடன், பொருளாதார நிலையிலும் முன்னேற்றத்தை காண முடியும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு 15 நாள்களின் பின் கைவிடப்பட்டது

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் 15 நாள்களாக மேற்கொண்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று புதன்கிழமை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் நேற்று மாலை 4 மணி தொடக்கம் அவசர சிகிச்சைப் பிரிவு செயற்படத் தொடங்கியுள்ளமையுடன் ஏனைய பிரிவுகள் இன்று வியாழக்கிழமை வழமைக்கு திரும்பவுள்ளன என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை 11 ஆம் திகதி திருக்கோவில் மெதடிஸ்த மாகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய திருக்கோவில் 3 ஆம் பிரிவு துரையப்பா வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய ஜெயக்குமார் விதுர்ஜன் என்ற மாணவன் மயங்கிவீழ்ந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி




உயிரிழந்தார்.

இச் சம்பவத்தையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் கவலையீனம் காரணமாகவே இந்த மாணவன் உயிரிழந்தார் எனக் குற்றம்சாட்டு தெரிவித்து வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று திரண்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது வைத்தியசாலை மீது கல்வீச்சு தாக்குதல் நடாத்தியதில் கட்டடத்தின் பல ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்தன. வைத்தியசாலை பெயர் பலகையையும் கூட்டத்தினர் உடைத்துச் சேதப்படுத்தினர்.

இதனையடுத்து வைத்தியசாலை வைத்தியர்கள் தமக்கு பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து கடந்த 12 ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவந்த நிலையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிந்தவூர், சம்மாந்துறை அக்கரைப்பற்று வைத்தியசாலை வைத்தியர்களும் கவனவீர்ப்பாகப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனை தொடாந்து நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவந்தனர். நேற்று மாலை 4 மணி தொடக்கம் அவசர சிகிச்சைப் பிரிவு செயற்படத் தொடங்கியது. ஏனைய பிரிவுகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் வழமைக்கு திரும்பவுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை வைத்தியசாலைக்குக் கல்வீசி சேதம் விளைவித்தனர் என்று கூறப்படும் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



# அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுக்க சரியான திட்டம் இருப்பது மிக அவசியம்!



## நிபுணத்துவ இராணுவ அதிகாரிகள் மத்தியில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

நாட்டிற்குள் இயற்கை மற்றும் அவசரகால நிலைமைகளுக்கு முகங்கொடுக்க சரியான திட்டத்தை வைத்திருப்பது மிகவும் அவசியமானது. அத்துடன் இதுபோன்ற பேரழிவுகளை எதிர்கொள்ளும் பிற நாடுகளுக்கு உதவுவதற்கான திறனை நாம் உருவாக்குவதும் அவசியமாகும்.

மத்தேகொடவில் உள்ள இலங்கை இராணுவ இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி படையணிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பொறியியலாளர்கள் படையணியின் விசேட திறன்கள் மற்றும் தயார்நிலைகளை அவதானிப்பதற்காக இராஜாங்க அமைச்சர் தென்னகோன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மத்தேகொடவில் உள்ள இலங்கை இராணுவ பொறியியலாளர் படையணிக்கு விஜயம் செய்தார்.

இராஜாங்க அமைச்சரை, இலங்கை இராணுவ தொண்டர் படையின் கட்டளைத் தளபதியும், இலங்கை பொறியியலாளர் படையணியின் கேர்ணல் தளபதியுமான மேஜர் ஜெனரல் எம். கே.ஜயவர்தன வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் இராணுவ உபகரணங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இரசாயன உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி, வெடிகுண்டுகளை அகற்றுதல், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் திறன்கள் மற்றும் இராணுவப் பொறியியலாளர்களின் செயல்பாடுகள் தொடர்பான விரிவான விளக்கக்காட்சியும் இதன்போது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள இரசாயன, உயிரியல் கதிரியக்க மற்றும் அணுசக்தி, வெடிபொருள்கள் அகற்றல், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் முகாமைத்துவ கருவி மற்றும் உபகரணங்களை அமைச்சர் தென்னகோன் பார்வையிட்ட பின்னர் அதனுடன் தொடர்புடைய செயல்விளக்கங்களையும் இதன்போது கேட்டறிந்து கொண்டார்.

இலங்கை இராணுவ பொறியாளர் சேவைகளின் கேர்ணல் நிலைக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லங்கா அமரபால, பொறியியல் பிரதானி மேஜர் ஜெனரல் ஷேவான் குலதுங்க, 59 ஆவது பொறியியலாளர் பிரிவின் பொதுக் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் கபில டோலகே மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் (ஓய்வு) உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.








# வடக்கில் தமிழ் இளைஞர்களைத் தொடர்ந்து நோண்டுகின்றது பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு

வடக்கில் இடம்பெற்ற யுத்தம் முடிவடைந்து பதினைந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழ் இளைஞர்கள் அரச பாதுகாப்புப் படையினரால் பின் தொடரப்படுவதால் அவர்களது பெற்றோர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் அரச ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட தமிழ் இளைஞர்கள், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் தொடர்ச்சியாக விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**வவுனியா ஓமந்தையில்**

வவுனியா, ஓமந்தை பிரதேசத்தில் வசிக்கும் பெற்றோர், ஆறு வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டில் இருக்கும் தமது மகனை குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளமையால் தாங்கள் அச்சமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டில் வசிக்கும் வவுனியா ஓமந்தை பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் ரதீபன் (வயது 32) என்பவரை குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த வருடம் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி சிங்கள மொழியில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றைப் பொலிஸார் கையளித்துள்ள போதும் இளைஞனின் பெற்றோர், அதில் எழுதப்பட்டிருந்த விடயம் தமக்குப் புரியவில்லை எனவும், அதனால் கடிதத்தை பெரிதாக பொருட்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வாரம் பொலிஸார் தமது வீட்டிற்கு வந்து மகனைப் பற்றி விசாரித்தனர் எனத் தெரிவித்த பெற்றோர்கள், 2018 ஆம் ஆண்டு முதல் தமது பிள்ளை வெளிநாட்டில் இருக்கின்றார் எனப் பொலிஸாருக்கு அறிவித்தனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

பல வருடங்களாக வெளிநாட்டில் இருக்கும் தமது பிள்ளையைக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கின்றமையால், அவரது பாதுகாப்பு குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

**மன்னாரில்**

இதேவேளை பதினாறு வருடங்களாக வெளிநாட்டில் வசிக்கும் முன்னாள் புலி உறுப்பினர் ஒருவரின் வீட்டிற்கு இராணுவத்தினர் சென்றனர் எனவும், இதனால் அவரது உறவினர்களும் அச்சமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பகுதியைச் சேர்ந்த உயிர் மாறன் எனப்படும் சகாயநாதன் சந்தியாப்பு 2004 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயல்பட்டு 2008ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டில் வசித்து வருகின்றார்.

அண்மையில் சந்தியாப்புவின் உறவினர் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் இவரைப் பற்றிய தகவல்களை திரட்டியமையால் அவரது உறவினர்களும் அச்சமடைந்துள்ளனர்.

**அழைப்புகள் தொடர்கின்றன**

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினருமான அரவிந்தன் எனப்படும் செல்வநாயகம் ஆனந்தவர்ணனை, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அவரது பேஸ்புக் கணக்கு குறித்த விசாரணை தொடர்பான வாக்குமூலத்தைப் பெறுவதற்காக மார்ச் 12ஆம் திகதி கொழும்பில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு மார்ச் 9ஆம் திகதி அவருக்கு அறிவிக்கப்பட்டது.

பேஸ்புக் கணக்கு குறித்து மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்பாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் மார்ச் 12ஆம் திகதி முன்னிலையாகுமாறு கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா தோணிக்கல் பிரதேசத்தைச் சேர்ந்த அரவிந்தன் என அறியப்படும் ஆனந்தவர்ணனுக்கு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் வவுனியா பிரிவுக்குப் பொறுப்பான, பிரதான இன்ஸ்பெக்டர் எச்.ஏ.யூ.எஸ்.கே. ஹேவாவசம்மின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

எனினும் தனக்கு இருந்த வேலைப்பளு காரணமாக விசாரணைக்கு முன்னிலையாகத் தாமதித்து நேற்று முன்தினம் விசாரணைக்குச் சென்ற அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாவட்ட ஊடக அலுவலராக கடமையாற்றும் ஒருவரையும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு விசாரணைக்கு என அழைத்திருந்தது.

மார்ச் 15ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு முல்லைத்தீவு பொலிஸ் தலைமையத்தினால் கையால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றின் ஊடாக, அரச ஊழியரும், சுயாதீன ஊடகவியலாளருமான திருச்செல்வம் திவாகருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

கடிதத்தில் மார்ச் 15ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள பூட்டாணி கெப்பிடல் கட்டடத்தில் பரிசோதனையை முன்னெடுக்கும் பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் விசாரணைக்கு அழைக்கப்படுவதற்கான காரணம் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும் காரணத்தை அறிவதற்காக திவாகர், முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் மாவட்ட பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரையும் சந்தித்து கேட்டபோதும் அவர்களும் காரணம் தெரியாது எனப் பதிலளித்துள்ளார்.

பின்னர் கடந்த 15ஆம் திகதி திருச்செல்வம் திவாகர் விசாரணைக்காக முன்னிலையானதோடு, இதுத் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் தகவல் அளித்திருந்தார்.



# விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் ஒட்டகப்புலத்தில் டக்ளஸூடன் சந்திப்பு

வலிகாமம் வடக்கில் படையினர் வசமிருந்த ஒரு பகுதி காணிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் கடந்தவாரம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டமையை அடுத்து அந்தக் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அக்காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் மக்களுக்கு அவற்றை முன்னெடுப்பதற்கான ஏதுநிலைகள் தொடர்பில் ஆராய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றது.

விடுவிக்கப்பட்ட நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் பிரதேச மக்களை அழைத்து அவர்களின் எண்ணப்பாடுகளை அறிந்துகொள்ளும் முகமாக ஒட்டகப்பு அமலஉற்பவ தேவாலையத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

முன்னதாக வலி வடக்கு தெல்லிப்பளை பிரதேசத்தில் சுமார் 30 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாதுகாப்பு படையினர் வசமிருந்த சுமார் 234.83 ஏக்கர் நிலங்கள் கடந்தவாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய கூட்டத்தின் போது மக்கள் தங்களுடைய ஏனைய காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும், அத்துடன் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள மானம்பிராய் பிள்ளையார் ஆலய வழிபாடுகளுக்கும் இராணுவத்தினர் வெள்ளிக்கிழமைகளில் அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர் .

ஏணைய காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும், மக்கள் மீளக்கூடிய ஏதுவான வசதிகள் செய்யப்பட வேண்டும், உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டும், அச்சுவேலி – தெல்லிப்பழை பிரதான வீதி திறக்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை மக்கள் அமைச்சரிடம் முன் வைத்தனர்.

இதற்கு அமைச்சர் சாதகமான பதிலை வழங்கி, அவை விரைவில் சாத்தியமாகும் என தெரிவித்தார்.








# புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய செயற்பாடுகள் நேற்று வழமைக்குத் திரும்பின

யாழ்ப்பாணம் – புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் நேற்று முதல் வழமைக் குத் திரும்பியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைக்கேற்ப சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய மருத்துவப் பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

புத்தூர் சந்தியில் உள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்கு அருகில்ஆலயதிருவிழாவொன்றுக்காக தண்ணீர்ப் பந்தல் அமைத்த இளைஞர்கள் ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் ஒலிக்கவிட்டிருந்தனர்.

கடந்த ஆண்டும் இதேபோன்று நடந்து ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய கண்ணாடிகள் உடைக்கப்பட்டு சேவைகளுக்கு இடையூறும் விளைவிக்கப்பட்டு, பின்னர் சட்ட நடவடிக்கை மூலம் வழமைக்கு கொண்டுவரப்பட்டு மருத்துவ சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் இம்முறையும் ஆலயத்திற்கு ஒலிபெருக்கி பாவனை அனுமதி வழங்கப்பட்டு மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் சேவைக்கு இடையூறு செய்யும் வகையில் அதிக சத்தமாக பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக வைத்தியசாலை வைத்திய அதிகாரியினால் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் முறையிடப்பட்டது.

முன்னைய சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தலையீட்டினால் அவ்வைத்தியர் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைக்கேற்ப சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய மருத்துவ பராமரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

# இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா தொடர்ந்து ஆதரவு தரும்

## அந்நாட்டின் ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையின் சுயாதீனத்தன்மை, ஒருமைப்பாடு, இறைமையின் பாதுகாப்பிற்காக சீனா எப்போதும் முன்னிற்கும் என சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள பிரதமர் தினேஷ் குணவர்தனவை பெய்ஜிங்கில் நேற்று சந்தித்த போதே சீன ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமல் நட்புறவு, அமைதி, பரஸ்பர மரியாதை உள்ளிட்ட கொள்கைகளின் கீழ் தொடர்ந்து செயற்பட



இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்களை முன்வைக்கும் பட்சத்தில், அதற்கு சீனாவின் ஆதரவு வழங்கப்படும் என சீன ஜனாதிபதி இதன்போது உறுதியளித்துள்ளார்.

அரசியல் , சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக இலங்கை மேற்கொள்ளும் பிரயத்தனங்களுக்கு சீனாவின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் சீன ஜனாதிபதி கூறினார் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சி உள்ளிட்ட இலங்கையின் ஏனைய கட்சிகளுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்தும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



# நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் கசிப்புக் குகை நேற்று முற்றுகை

யாழ்ப்பாணம் – நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புக் குகையொன்று நேற்று முற்றுகையிடப்பட்டது.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

600 லீற்றருக்கும் மேற்பட்ட கோடாவும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் இதன்போது பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



# திருமலையில் 1008 சிவலிங்கம் வைப்பதை தடுக்குமாறு கோரி பிக்குகள் ஆர்ப்பாட்டம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் 1008 சிவலிங்கம் வைப்பதை தடுக்குமாறு கோரியும், சிங்கள மக்களுக்குக் காணி உறுதிப்பத்திரஙகளை வழங்காமல் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று ஒரு சிறு எண்ணிக்கையினரான பிக்குகளினால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கோகன்னபுர காக்கும் அமைப்பினால் நகர மணிக் கூண்டு கோபுரத்தருகே இந்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதில் பங்குபற்றிய பிக்குகள் சார்பில் கூறப்பட்டவை வருமாறு:–

திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்து வரும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சார்பாக குரல் எழுப்பும் விதத்தில் நாங்கள் செயல்பட்டு வருகின்றோம்.

துறைமுக அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி ஊடாக இதுவரை 4,445 குடும்பங்களை விரட்டி அடிப்பதற்கு தற்போது செயற்திட்டங்கள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

கடந்த காலங்களில் திமுதுகம, கரடிபுல் போன்ற இடங்களில் வாழ்ந்து வந்த மக்களுக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விரட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நீதிமன்றக் கட்டளைகளை எடுத்துக்கொண்டு அவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக் கையில் ஈடுபட்டு வருகின்றமையை அவதானித்தோம்.

அதேபோன்று சமன்புர கிராமத்தில் உள்ளவர்களுக்கும் சட்டங்களை பயன்படுத்தி அவர்களை எழுப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது.– என்றார் பிக்கு ஒருவர்.

மாவட்டத்தில் 1008 சிவலிங் கங்களை வைப்பதற்குத் தீர்மானித் துள்ள நிலையில் சிங்கள மக்களின் காணிகளுக்குரிய உறுதி பத்திரங்கள் வழங்கப்படாமல் இருப்பதைக் கண்டிக் கிறோம். தொல்பொருள்களுக்குரிய இடங்களைச் சேதமாக்குவதைக் கண்டித் தும் எங்களுடைய எதிர்ப்பை மேற் கொண்டு வருகின்றோம்.

திருகோணமலையில் இனங்களுக் கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்து வதற்குப் பலர் முயற்சித்து வருகின்றனர். அதற்கு இடம் அளிக்க மாட்டோம் . – எனவும் திருகோணமலை கோகன்னபுர காக்கும் அமைப்பின் பிரதானி தெரி வித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத் தப்பிக்குகளுக்கு வலுவூட்டும் விதத்தில் பெண்களும் கலந்துகொண்டனர்.







# மனித உரிமை ஆணைக்குழுவில் கெஹலியவின் மகள் முறைப்பாடு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகளான சமித்ரா ரம்புக்வெல்ல மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை நேற்றுப் பதிவு செய்தார்.

கெஹலிய ரம்புக்வெல்ல கைது செய்யப்பட்டமை முறையற்ற செயல் எனவும், அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறும் சமித்ரா ரம்புக்வெல்ல மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்



துள்ளார்.

ஒருவர் குற்றமற்றவர் என நிரூபிக்க அரசமைப்பில் உரிமை உள்ளது எனவும் தனது தந்தை விடயத்தில் அந்த உரிமை மீறப்பட்டுள்ளது என்றும் சமித்ரா ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டின் சாதாரண பிரஜை என்ற வகையில், சட்ட ரீதியான செயற்பாடுகளுக்கு அமைய, முதலில் விசாரணை நடத்தப்பட்டு அந்த விசாரணைக்கு அமையவே ஒருவர் கைது செய்யப்பட வேண்டும். ஆனால், இன்று அவரை கைது செய்து விளக்கமறியலில் வைத்த பின்னரே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன." – என்றார்.

# இலங்கையர் ஒருவர் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய மாதாந்தம் 17,014 ரூபா தேவை!

வறுமைக்கோடு தொடர்பான புதிய அட்டவணையில் தெரிவிப்பு

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வறுமைக்கோடு தொடர்பான புதிய அட்டவணையை வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய அட்டவணைக்கு அமைய, இலங்கையர் ஒருவரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்தம் 17 ஆயிரத்து 14 ரூபா தேவைப்படுகின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் இந்தத் தொகை



அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாவட்டங்கள் தோறும் இந்த தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் தனிநபரின் மாதாந்த செலவாக 18 ஆயிரத்து 350 ரூபா காணப்படுகின்றது.

இதற்கமைய, இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் அதிக செலவினைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு அமைந்துள்ளது.

குறைந்த செலவினைக் கொண்ட மாவட்டமாக மொனராகலை உள்ளது.

மொனராகலையில் ஒருவர் வறுமை நிலையை எட்டாமல், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மாதமொன்றுக்கு 16 ஆயிரத்து 268 ரூபா தேவைப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# துமிந்த நாகமுவ உள்ளிட்ட மூவருக்கும் ஏப்ரல் 3ஆம் திகதி வரை விளக்கமறியல்

மக்கள் போராட்ட இயக்கம் கடந்த 20 ஆம் திகதி முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட மூவர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோது, இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

துமிந்த நாகமுவவுடன், அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் ரத்கரவ்வே ஜினரத்தன தேரர், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர உள்ளிட்டோரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்துக் கைது செய்யப்பட்ட மேலும் ஐந்து சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்திய பின்னர் சந்தேகநபர்களை தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிப்பதற்கு நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றபோது தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களில் ஒளிபரப்பான காட்சிகள் விசாரணைகளுக்காக தேவைப்படுகின்றன என வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸார் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர்.

மக்கள் போராட்ட இயக்கத்தினர் கொழும்பு கோட்டையில் நடத்திய எதிர்ப்பு நடவடிக்கையின் போது 33 பேர் கைது செய்யப்பட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.03.2024




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சிறந்த பலன்கள் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்களிடத்தில் காணப்படும் அசாதாரணமான திறமை காரணமாக பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் ஒட்டுதலை வளர்த்துக் கொண்டு ஒட்டி உறவாடுவதன் மூலம் நல்லுறவை பராமரிக்கலாம். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாக காணப்படும். முடிவுகள் எடுப்பதில் திடமாக இருப்பீர்கள்.

பதவி உயர்வு வகையில் பாராட்டு கிடைக்கும். உங்கள் திறமை மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு இருவரும் மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று உங்களின் தரமான நேரத்தை கழிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கூடுதல் பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உடல் ஊனமுற்றோர் அல்லது நோயாளிகளுக்கு தொண்டு செய்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சவாலான சூழல்களை நீங்கள் சமாளிக்க வேண்டும்.

குடும்ப பிரச்சினை பற்றி உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு ஏற்படும்.

பணம் அதிக அளவில் காணப்படாது. மருத்துவ செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இன்று தோல் எரிச்சல்கள் காணப்படலாம். எண்ணெய் மற்றும் கார உணவுகளை தவிர்க்கவும்.




இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும். என்றாலும் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.




உங்களின் சிறந்த தகவல் பரிமாற்ற திறன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள். இன்று நம்பிக்கையான மனநிலையும் உறுதியும் உங்களிடம் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சிறந்த பணிக்கு நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் தனித்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை கிடக்கும். இது உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.




இன்றைய சவால்களை எதிர்கொள்ள நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க இசை மற்றும் பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் சில போராட்டங்களை எதிர்கொள்வீர்கள். அதிகப் பணிகள் காணப்படும். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவுநிலை காணப்படாது. வேறுபாட்டைகளைய இருவரும் மனம் திறந்து பேசுவது நல்லது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் வளர்ச்சியில் தடைகளை சந்திப்பீர்கள். உங்கள் இலக்குகள் நோக்கி செயல்பட வேண்டும். பெரிய அளவில் சிந்தனையை ஏற்படுத்திக் கொண்டு விரும்பிய பலன்களை அடைய வேண்டும்

பணியில் சிறிது மந்தநிலை காணப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் தைரியம் இழந்து காணப்படுவீர்கள். நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுங்கள்.

உங்கள் பேச்சில் கட்டுப்பாட்டை இழக்க வாய்ப்புள்ளது. எனவே உங்கள் துணையுடனான அணுகுமுறையில் பொறுமை தேவை. நட்புடன் பழக முயலவும்.

பூர்வீக சொத்து மூலமாக பண வரவு ஏற்படும். என்றாலும் உங்கள் சேமிப்பு நிலை உயர்வது கடினம்.




உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டும். பதட்டப்படாமல் கட்டுப்பாட்டுடன் உங்கள் செயல்களை செய்ய வேண்டும்.

உங்கள் கடினமான பணிகளைகூட எளிதாக முடிப்பீர்கள். விரும்பி பணியாற்ற முயல்வதன் மூலம் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று சமாதனப் படுத்துங்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவு மேம்படும்.

வங்கியில் போதுமான பண இருப்பு பராமரிக்க இயலாது.தவிர்க்க முடியாத செலவுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.அதிக வேலை காரணமாக தலை வலி பாதிப்பு ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.03.2024




இன்று நீங்கள் உயர்ந்த நிலையை அடைவீர்கள். உங்கள் திறமைகளை வெளிபடுத்த நம்பிக்கையான வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாகப் பழக வேண்டும். இதன் மூலம் இருவரின் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலை மகிழ்ச்சிகரமாகவும் பாதுகாப்பாகவும் காணப்படும். உங்கள் பாதுகாப்பிற்கு தேவையான பணம் கிடைக்கும்.

உங்களிடம் மிகுந்த ஆற்றல் காணப்படும். இதன் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை அளிக்காது. இன்று வளர்ச்சி காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். பதட்டத்தை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மகிழ்ச்சி கரமாக இருக்காது. பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ள முனைவீர்கள். இதனால் இருவரிடையிலான உறவில் மகிழ்ச்சி குறையும்.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது.வரவுக்கும் செலவுக்குமான சமநிலையை பராமரிப்பது கடினமாக இருக்கும். தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று நீங்கள் மும்மரமாக செயல்படும் சூழ்நிலை காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பெயர் எடுக்க வாய்ப்புள்ளது. கடினமான பணிகளையும் இன்று எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணம் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிறைந்த ஆற்றலும் சிறந்த ஆரோக்கியமும் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய கடினமான சூழ்நிலைகளை அமைதியாக சமநிலை உணர்வுடன் சமாளித்தால் சிறந்த பலன் கிடைக்கும். இன்று அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களிடம் மோதல்கள் காணப்படும். சுமூகமாக பணியாற்ற உங்கள் பதற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிருங்கள்.இதன் மூலம் உறவில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தில் ஸ்திரத்தன்மை பாதுகாக்க சிக்கனப்படுத்தி பணத்தை சேமிக்க வேண்டும்.

